**Judicial Form No.53**

**(See Rule 42)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

S. T.C. No: 564 of 2025

DATE : 23.02.2026

Depositions of witness for Prosecution

PW: 7

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜா | Caste | |
| Father/Husband's Name | காசிராஜன் | Calling | தலைமை காவலர் |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23th day of February 2026

எதிரி ஆஜர். வழக்கறிஞர் திரு. பிள்ளையார்ராஜா ஆஜர்

<u>முதல் விசாரணை</u> –

நான் தற்போது வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் கருத்தபாண்டியன் மற்றும் புலன் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திரு விஜய சண்முகநாதன் ஆகியவர்கள் பணி மாறுதல் பெற்று சென்ற காரணத்தினாலும், வழக்கின் சாட்சிகள் வழக்கை ஆதரிக்காமல் சமாதானமாக சென்றுவிட்டதாக மனு தாக்கல் செய்துவிட்ட காரணத்தினாலும், வழக்கை விசாரணைக்காக நிலுவையில் வைத்திருப்பதால் எவ்வித பலனும் ஏற்படப்போவதில்லை என்கின்ற காரணத்தினாலும், வழக்கில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க வேண்டி, அவர்கள் தாக்கல் செய்து வைத்திருந்த ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 07.04.2024 அன்று மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று, காவல் நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர்

கருத்தபாண்டியன், மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த சேவுக பாண்டியன் என்பவரை விசாரணை செய்து, அவர் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்து, நிலையம் வந்து 18.45 மணிக்கு நிலைய குற்ற எண். 81/2024, சட்டப்பிரிவுகள் 294(b). 323, IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **புகார்வாக்குமூலம் மனு அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு வழக்கை சார்பு ஆய்வாளர் விஜய சண்முகநாதன் மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அதே தேதியில் 20.00 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் மருத்துவர் ஜோனத்தன் அபீஸ்டேவிட் என்பவரை விசாரித்து காயச்சான்றுகள் பெற்றுள்ளார். **காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கின் எதிரிகளுக்கு குவிமுச 41–A அழைப்பானை சார்பு செய்து அதன் அடிப்படையில் வழக்கின் விசாரணைக்கு ஒத்துழைப்பு செய்ததால் எதிரிகளை கைது செய்யவில்லை. புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு